1994 நவம்பர் 10]

92—

ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நாளன்றே உதவித் தொகையை வழங்குதல்.

***30138—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையை அரசுப் பரிசாக திருமண நாள் அன்றே வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பெண்கள் காவல் நிலையம், பெண் சிசு பாதுகாப்புத் திட்டம், இரு பெண் குழந்தைகளுக்கான திட்டம், பெண்கள் திருமண உதவித் திட்டம், இப்படி பல நல்ல திட்டங்களைப் பெண்களுக்காக வாழ்க்கையிலே உயர வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். பெண்கள் உதவித் தொகையை திருமண நாள் அன்றே, மண மேடையிலேயே நமது இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பரிசாக வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அரசு அலுவலருக்கு உரிய கால அவகாசத்தோடு, திருமணப் பத்திரிகையையும் வைத்து தகுதி உள்ளவர்கள் மனுச் செய்தால், அந்த அடிப்படையிலே திருமண நாள் அன்றே வழங்குவதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற அடிப்படைத் தகுதிகள் என்ன? *1993-94*ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர்கள் பயனடைந்துள்ளனர்? *1994-95*ஆம் ஆண்டில் எவ்வளவு பேர்கள் பயனடைய இருக்கிறார்கள்? இதற்கான வருமான வரம்பை உயர்த்த் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் *6,500* ரூபாய் என்று இருந்த வரம்பை இன்றைக்கு *12,000* ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். இதற்குமேல் அதை உயர்த்துவதற்கான பரிசீலனை அரசிடத்தில் இல்லை. அதைப்போல் *1000* ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்த விதவை திருமண உதவித் திட்டத்தில், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர் ஆயிரம் ரூபாய் என்பதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். *1993-94*-ல் *863* பேர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. *17.26* இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. *1994-95*-ல் *1050* பேர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று அதற்கு *21* இலட்சம் ரூபாயை சமூக நலத் துறை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *93*, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

93—

வன வளத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்.

***11024—திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீஃப் கன்சர்வேட்டராக சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., எனும் அதிகாரி வன வளத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி அரசுக்கு ஏதேனும் திட்டம் சமர்ப்பித்தாரா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?